செய்தி வெளியீடு எண்.**34** நாள்.**06.03.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் **–2009** பிரிவு **18(1)–**ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்கவும், சென்னை, உயர்நீதிமன்ற வழக்கு W.P.14224/2017 தீர்ப்பாணையின்படியும் அனைத்து வகை பள்ளிகளும் பள்ளிக் கல்வித் துறையின் தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரம் பெற்றே செயல்பட வேண்டும் எனவும் தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரமின்றி எந்த ஒரு பள்ளியும் செயல்படக்கூடாது எனவும் ஏற்கனவே பள்ளிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் பள்ளிகளை ஆய்வு செய்து தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரமின்றி செயல்பட்டு வந்த பள்ளிகளுக்கு காரணம் கேட்கும் குறிப்பாணைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரமின்றி செயல்பட்டுவரும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படாததுடன் அப்பள்ளிகளால் வழங்கப்படும் கல்விச் சான்றுகள் தகுதியற்றதாகவும், அரசால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகள் எழுத இயலாத நிலையும் ஏற்படுகிறது.

எனவே சென்னை மாவட்டம், அம்பத்தூர் கல்வி மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் நாளது தேதிவரை தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரம் பெறாமல் செயல்பட்டு வருவதாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டு தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரம் பெறாத இவ்வகை பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையினை பெற்றோர்கள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் நோட்டீஸ் வழங்கப்பட்டு பத்திரிக்கைச் செய்தி கொடுக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரமின்றி செயல்படும் பட்சத்தில் சார்ந்த பள்ளிகள் மீது சட்டரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், சார்ந்த பள்ளிகளுக்கு எச்சரிக்கை செய்து **30.05.2019** தினமணி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. தற்போது சென்னை–**95**, மதுரவாயல், கங்கையம்மன் நகர், வி.என்.ஆர் விவேகானந்தா வித்யாலயா பள்ளியானது தமிழ்நாடு மாநில அரசு மற்றும் மத்திய இடைநிலைக்கல்வி வாரியம் (CBSE) ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் இணைப்பு பெறாத பள்ளியாகும். ஆனால் மத்திய மனிதவள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் The National Institute of Open

Schooling, MHRD, New Delhi இல் அங்கீகாரம் பெற்ற பள்ளி என சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்த ஆவனங்களின் அடிப்படையில் , பள்ளிச் செல்லா மற்றும் இடையில் நின்ற 14 வயதிற்குட்பட்ட மாணவர்களை மட்டும், ‘A’ - Level (மூன்றாம் வகுப்பிற்கு இணையானது), ‘B’ - Level (ஐந்தாம் வகுப்பிற்கு இணையானது ) மற்றும் ‘C’ - Level (எட்டாம் வகுப்பிற்கு இணையானது ) என்ற முறையில் இந்தப்பள்ளியில் மாணவர்களை சேர்க்கலாம் என இதன்மூலம் முதன்மைக் கல்வி அலுவலரால் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இத்தகவலை திருவள்ளூர் மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**